ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்- 275) Aug (1) / 2018



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

## உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் ....................................................................3

2. ஸ்ரீபாஷ்யம் ....................................................................5

3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் ....................................................................8

4. ஆசார்ய ஹ்ருதயம்....................................................................11

5. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)....................................................................17

6. இராமாநுச நூற்றந்தாதி....................................................................26

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

# லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 95)

15. ஸம்ஹ்ருத்ய ஸர்வஸம்பாரம் சுத்த அசுத்தாத்வஸம்பவம்
ஸ்ருஷ்டௌ ஸமுத்யதா சக்தி: ஸூர்யே பும்ஸி ஸநாதநே
16. பரமே போக்த்ரு ஸா விதாய ப்ரதிஸஞ்சரம்
அக்நீஷோம மயாத் பாவாத் ஸ்தூலாத்ஸா ப்ரதிநிர்கதா
17. தாம்பத்யம் மத்யமம் சச்வத் பிந்துநாதமயம் ச்ரிதா
சக்தி: சாந்தாத்மகம் திவ்யம் ஸூக்ஷ்ம தாம்பத்யம் ஆச்ரிதா
18. ப்ரதிதிஷ்டதி ஸா திவ்யே வ்யாபகே பரமாத்மனி
அஸ்ய மாத்ரா விதாநஜ்ஞை: ஸார்தாஸ்திஸ்ர உதாஹ்ருதா:

**பொருள்** – சுத்தம் மற்றும் அசுத்தம் ஆகிய இரண்டு பிரிவுகளுக்கும் அடங்கியுள்ளதான அனைத்து வஸ்துக்களையும் ஸம்ஹாரம் செய்த பின்னர், சக்தியானவள் அவை அனைத்தையும் மீண்டும் ஸ்ருஷ்டிக்கத் தொடங்குகிறாள். அவள் ஸூர்யனும், புராதானமாக உள்ளவனும், உயர்ந்தவனும், அனுபவிப்பவனும் ஆகிய புருஷனை ஸஞ்சரிக்கச் செய்கிறாள். தொடர்ந்து தானே ஸூக்ஷ்ம நிலையிலிருந்து அக்நீஷோபமான ஸ்தூல ரூபத்தை எடுக்கிறாள். இதனைத் தொடர்ந்து பிந்து மற்றும் நாதம் ஆகியவை சேர்ந்த தாம்பத்யத்தை அடைகிறாள். அதன் பின்னர் அவள் எங்கும் வ்யாபித்துள்ள பரமாத்மாவில் உள்ள திவ்யமான நிலையாக ஸூக்ஷ்ம ரூபத்தில் மாறுகிறாள். இத்தகைய தாம்பத்யம் என்பது (அதாவது "ஓம்") மூன்றரை மாத்திரை கொண்டதாக அறிஞர்கள் கூறுகிறார்கள்.

19. த்ரயோ அக்நயஸ்த்ரயோ லோகாஸ்த்ரயோ வேதாஸ்த்ரயோ குணா:
த்ரயோ தேவாஸ்த்ரயோ வ்யூஹாஸ்த்ரயோ வர்ணாஸ்த்ரய: ஸ்வரா:

20. த்ரிதயம் த்ரிதயம் சக்ர யத் கிஞ்சித் ஜகதீகதம்
ததாதி த்ரிதயம் ஜ்ஞேயமர்தமாத்ரா நிரஞ்ஜனா

**பொருள் -** சக்ரா! மூன்று அக்னிகள் (க்ருஹபத்யம், ஆஹ்வநீயம், தக்ஷிணம்), மூன்று லோகங்கள் (பூ:, புவ:, ஸ்வ:), மூன்று வேதங்கள் (ரிக், யஜுர், ஸாமம்), மூன்று குணங்கள் (ஸத்வம், ரஜஸ், தமஸ்), மூன்று தேவதைகள் (ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன்), மூன்று வ்யூஹங்கள் (ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன்), மூன்று வர்ணங்கள் (ப்ராஹ்மணன், க்ஷத்ரியன், வைசியன்), மூன்று ஸ்வரங்கள் (அ, இ, உ) என்று இப்படியாக இந்த லோகத்தில் மூன்றாக எவை எவை உள்ளனவோ, அவை அனைத்தும் "ஓம்" என்பதில் உள்ள முதல் மூன்று அக்ஷரங்களை (அ, உ, ம) குறிப்பதாகவே கொள்ளவேண்டும். "ஓம்" என்பதில் உள்ள எஞ்சிய அரை மாத்திரை (அதாவது பிந்து அல்லது "ம" என்பதன் மீது உள்ள புள்ளி) என்பது, அனைத்தின் இருப்பாகும்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

பகவத் ராமானுஜர் அருளிச் செய்த

# ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 275)

## அதிகரணம் – 8 - மத்வதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – ஆதித்யன் போன்றவர்களுக்கு மதுவித்யை முதலான ப்ரஹ்மவித்யைகளில் அதிகாரம் உண்டு என்று நிரூபிக்கப்படுகிறது.

**1-3-30 மத்வாதிஷு அஸம்பவாத் அநதிகாரம் ஜைமிநி:**

**பொருள்** - மதுவித்யை போன்ற வித்யைகளில் அதிகாரம் ஏற்படாது என்பதால், தேவர்களுக்கு அதிகாரம் இல்லை என்றே ஜைமினி கூறினார் (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்).

**குறிப்பு** - (இது ஸ்ரீபாஷ்யத்தின் பகுதி அல்ல. மதுவித்யை என்றால் என்ன என்று கூறுவதற்காக எழுதப்பட்டது) மதுவித்யை என்பது சாந்தோக்ய உபநிஷத்தில் (3-1-1) உள்ளதாகும். இது தேனாக சூரியனை த்யானம் செய்வதாகும். சூரிய மண்டலத்தை, தேவதைகள் உட்கொள்ளும் தேனாகவும், மேல் உலகில் அந்தரிக்ஷம் எனப்படும் தேன் அடை இருப்பதாகவும், வேதங்கள் இதிகாச புராண உபநிஷத்துக்களுடன் சேர்ந்து வண்டுகள் என்பதாகவும், "வஸுக்கள், ருத்ரர்கள், ஆதித்யர்கள் மற்றும் மருத் ஸாத்ய கணங்கள் நான்கு திசைகளிலும், மேல்புறத்திலும் நிற்பதாகவும் கருதி, சூரியனுக்கு அந்தர்யாமியாக பகவானை உபாஸனம் செய்தலே மதுவித்யை எனப்படும்.

**(ஸ்ரீபாஷ்யம் தொடர்கிறது) விஷயம்** - தேவர்களுக்கு ப்ரஹ்மவித்யையில் அதிகாரம் உண்டு என்று இதுவரை கூறப்பட்டது. அடுத்து ஒரு சந்தேகம் எழுகிறது. ஒரு சில வித்யைகளில் எந்த தேவதை ஆராதிக்கப்படுகிறதோ, அந்தத் தேவதைக்கு அந்த வித்யையில் அதிகாரம் உண்டா (அதாவது அந்த தேவதை அந்த வித்யையைக் கைக்கொள்ள இயலுமா) என்ற சந்தேகம் எழுகிறது. இந்த விஷயத்தில் எது சரியானது?

**பூர்வபக்ஷம்** - "மதுவித்யை போன்றவற்றில் அதிகாரம் இல்லை" என்று ஜைமினி முனிவர் கூறுகிறார்; ஏன்? "அஸம்பவாத் – நிகழ வாய்ப்பில்லை". அதாவது ஆதித்யர்கள், வஸுக்கள் போன்றவர்களை உபாஸிப்பவர்களாக, மற்றொரு ஆதித்யனோ அல்லது வஸுவோ இருக்கமுடியாது. மேலும் வஸு என்ற தன்மையை முன்பே கொண்டுள்ள ஒரு தேவதைக்கு (மதுவித்யை மூலம் கிட்டுவதான) வஸுவாக உள்ள தன்மை என்பது மீண்டும் கிட்டுவது பொருந்தாது. மதுவித்யை என்ற பகுதியில், "ருக் வேதம் போன்ற வேதங்களில் உள்ள ஒரு சில கர்மங்களை இயற்றும்போது அதன் பலன்கள், சூரியனுடைய கதிர்கள் வழியாக ரஸமாக (தேன் அல்லது மது) மாறி, அவற்றின் இருப்பிடமான ஆதித்யனைச் சென்றடைகின்றன. இதனால் ஆதித்யன் மது எனப்படுகிறான். ஆதித்யனின் இந்தப் பகுதியானது (சிவந்த பகுதி – மேலே உள்ள குறிப்பு காண்க) வஸுக்களால் இனிமையாக அனுபவிக்கப்படுகிறது. இந்தப் பகுதியானது, உபாஸனைக்கு ஏற்றதாகவும், வஸு என்ற தன்மையைப் பலனாக அளிப்பதாகவும் உள்ளது", என்று கூறப்படுகிறது. ச்ருதியில், சாந். (3-1-1) - அஸௌ வா ஆதித்யோ தேவமது - இந்த ஆதித்யன் தேவர்களின் மதுவாக உள்ளான் - என்று தொடங்கி, சாந். (3-6-1) – தத் யத் ப்ரதமம் அம்ருதம் தத் வஸவ உபஜீவந்தி - அந்த அமிர்தத்தில் முதல் அமிர்தம் எதுவோ அதில் வஸுக்கள் பிழைக்கிறார்கள் - என்று கூறி, சாந். (3-6-3) - ஸ ய ஏதத் ஏவம் அம்ருதம் வேத வஸூநாம் ஏவ ஏகோ பூத்வா அக்நேநைவ முகேந ஏதேவ அம்ருதம் த்ருஷ்ட்வா த்ருப்யதி - இவ்விதம் உள்ள அமிர்தத்தை அறிபவன், அக்னியை முன்னிட்டு வஸுவாகிறான்; பின்னர் அந்த அமிர்தத்தைக் கண்டு, அந்தப் பார்வை மூலமே மனநிறைவு கொள்கிறான் - என்று முடிக்கப்பட்டது.

**1-3-31 ஜ்யோதிஷு பாவாத் ச**

**பொருள் -** உயர்ந்த ஜ்யோதியான பரமாத்மாவிடம் உபாஸனம் உண்டு என்பதால், இந்த உபாஸனை தேவர்களுக்கு இல்லை. (இதுவும் பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்).

**பூர்வபக்ஷம்** – ப்ரு. (4-4-16) - தம் தேவா ஜ்யோதிநாம் ஜ்யோதிராயுர்ஹோபாஸதே அம்ருதம் - ஜ்யோதிகளுக்கு எல்லாம் ஜ்யோதியாக உள்ள பரமாத்மாவையே தேவர்கள் தங்களுடைய ஆயுளாகவும் அமிர்தமாகவும் உபாஸிக்கிறார்கள் – என்று, உயர்ந்த ஜ்யோதியான பரப்ரஹ்ம உபாஸனை என்பது, தேவர்களுக்குக் கூறப்பட்டது. ப்ரப்ரஹ்மத்தை உபாஸித்தல் என்பது தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் பொதுவானதே ஆகும். இப்படி உள்ளபோது இந்த வரியில் தேவர்களுக்கு உபாஸகத்வம் (உபாஸித்தல் என்ற செயல்) உண்டு என்று கூறுவதன் மூலம், அவர்களுக்கு இந்த ப்ரஹ்ம உபாஸனை தவிர மற்ற அனைத்து உபாஸனைகளும் தள்ளப்படுகின்றன என்பதே கூறப்படுகிறது. ஆகவே வஸுக்கள் முதலானவர்களுக்கு (மதுவித்யையில்) அதிகாரம் இல்லை. இவ்விதம் கூறினால் நாம் விடை அளிப்போம் (அடுத்த ஸூத்ரம் காண்க).

தென்னரங்கன் திருவடிகளே சரணம்
தென்னரங்கன் செல்வம் முற்றும் திருத்தி வைத்த இராமாநுசன் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 275)

## பிள்ளான் வாக்கியங்களின் கருத்து

**மூலம்** – இப்படி பக்த்யாதிகள் போலே சரணாகதி தர்மமும் கர்த்தவ்யமாக விதிக்கப்படுகையால், "தன்னால் வரும் நன்மை விலைப்பால் போலே, ஈச்வரனால் வரும் நன்மை முலைப்பால் போலே" என்று பிள்ளான் வார்த்தைக்கு, "பக்தி ப்ரபத்யாதிகளெல்லாம் அவனாலே வருகினவென்று நினைக்கவேண்டும்" என்று தன்னுடைய பராதீந கர்த்ருத்வத்திலே தாத்பர்யம்.

**விளக்கம்** – இவ்விதமாக பக்தி போன்று, சரணாகதி என்னும் தர்மமும் செய்யப்படவேண்டிய ஒன்று என விதிக்கப்படுகிறது. ஆகவே திருக்குருகைப் பிரான் பிள்ளான் கூறியதான "நாமே நமக்கு ஏற்படுத்திக் கொள்ளும் நன்மை என்பது விலைக்கு வாங்கப்படும் பால் போன்றதாகும். ஈச்வரனால் நமக்கு உண்டாகும் நன்மை என்பது தாய்ப்பால் போன்றதாகும்", என்பதன் மூலம், "பக்தி மற்றும் ப்ரபத்தி போன்ற அனைத்து அவனுடைய கருணையால் உண்டாவதே ஆகும்" என்பதை உணரவேண்டும். மேலும் ஜீவாத்மா ஈச்வரனை நம்பியே உள்ளான் என்பதும் தெளிவாகிறது.

## ஆளவந்தார் செய்த ப்ரபத்திக்கு க்ஷமை கொண்டார் என்பதான கருத்துக்கு மறுப்பு

**மூலம் -**

அந்ய விச்வாஸ ஸித்தயர்த்தம் பக்த்யுபாய விதிம் வதந்
ஸர்வசாஸ்த்ரேஷ்வ விச்வாஸம் ஆதத்தே முகபேதத:

மத்யோபஹத மாத்ரஸ்த தீர்த்த த்ருஷ்டாந்த வர்ணனம்
அஹங்காராந்வயே து ஸ்யாத் ப்ரபத்தாவபி பக்திவத்

ஆகையால், "ப்ரஸீத மத் வ்ருத்தம் அசிந்தயித்வ" இத்யாதிகள் முன்பு தாம் பண்ணின ப்ரபத்திக்கு க்ஷமை கொள்ளுகிறபடி என்று சிலர் சொல்லுமதுவும் அஹங்கார ஸ்பர்சாதி சங்கையப் பற்றவாமத்தனை அல்லது யதாசாஸ்த்ரம் அநுஷ்டித்த ப்ரபத்தி அபராதமாய் அதுக்கு க்ஷமை கொள்ளுகிறபடியன்று. அப்படியாகில், "பிதாமஹம் நாதமுனிம் விலோக்ய ப்ரஸீத:" என்கிற பூர்வாசார்ய புரஸ்காராதிகளும் தாம் செய்கிறதாகையாலே, இதுக்கு க்ஷமை கொள்ள வேண்டி அநவஸ்தையாம். இது ஸ்வ பர நிர்வாஹகமாகில் இது போல முன்பு பண்ணின ப்ரபதமும் ஸ்வ பர நிர்வாஹகமென்னலாம். இங்குச் சொல்லும் குதர்க்கங்களாலே பூர்வர்கள் பண்ணின ப்ரபத்தியும் அபராதமாயறுகையாலே, பூர்வர்களை முன்னிடவுமொண்ணாதொழியும். ஆகையால் இஸ் ஸ்தோரத்தில் ஆத்யந்தங்களில் பண்ணின ஆசார்ய புரஸ்காரம் இங்கு அருளிச்செய்கிற ப்ரபத்திக்கு அபேக்ஷிதமாயாதல், வைகல்ய பரிஹாரார்த்தமாயாதல் உபயுக்தமாய் வந்ததித்தனை. இவ் ஆசார்ய புரஸ்காரத்திற்போலே ப்ரபத்யாதிகளிலும் பராதீந கர்த்ருத்வம் தோஷமன்று.

**விளக்கம் -** அந்ய விச்வாஸ ஸித்தயர்த்தம் பக்த்யுபாய விதிம் வதந் ஸர்வசாஸ்த்ரேஷ்வ விச்வாஸம் ஆதத்தே முகபேதத: - ப்ரபத்தி என்னும் மற்றொரு உபாயத்தில் விச்வாஸம் உண்டாவதற்காக பக்தி என்னும் உபாயம் குறித்த விதியை உரைப்பவன், அனைத்து சாஸ்த்ரங்களிலும் நம்பிக்கை அற்ற நிலையை உண்டாக்குகிறான். மத்யோபஹத மாத்ரஸ்த தீர்த்த த்ருஷ்டாந்த வர்ணனம் அஹங்காராந்வயே து ஸ்யாத் ப்ரபத்தாவபி பக்திவத் – பக்தியோகத்தை ஒரு சிலர், "மதுவின் கலப்பு காரணமாக அசுத்தமான தண்ணீர்" என்று ஒப்புமை

கூறுகிறார்கள்; ஆனால் இத்தகைய ஒப்புமை என்பது பக்தியோகத்தில் அஹங்காரம் கலந்திருந்தால் மட்டுமே பொருந்தும்; இத்தகைய ஒப்புமை என்பது ப்ரபத்தியில் அஹங்காரம் கலந்திருந்தாலும் பொருந்தும். ஆகவே, ஸ்தோத்ரரத்னம் (65) - ப்ரஸீத மத் வ்ருத்தம் அசிந்தயித்வ – எனது செய்கையை ஆராயாமல் என்னை அனுக்ரஹிக்கவேண்டும் – என்று ஸ்வாமி ஆளவந்தார் கூறுவது, தாம் முன்பு செய்த ப்ரபத்திக்கான மன்னிப்பே ஆகும் என்று சிலர் கூறுகிறார்கள்; ஆனால் ஆளவந்தார் இவ்விதம் உரைத்தல் என்பது அத்தகைய ப்ரபத்தியின்போது தனக்கு அஹங்காரம் கலந்திருக்கலாம் என்னும் எண்ணத்தாலேயே ஆகும் அல்லாமல், சாஸ்த்ரங்களால் கூறப்பட்ட ப்ரபத்தியைச் செய்தது குற்றம் ஆகும் என்னும் எண்ணத்தால் அல்ல. இவ்விதம் பொருள் கொண்டால் (அதாவது குற்றம் என்று கொண்டால்), ஸ்தோத்ரரத்னம் (65) - பிதாமஹம் நாதமுனிம் விலோக்ய ப்ரஸீத: - எனது பாட்டனாராகிய நாதமுனிகளுக்காக – என்று தன்னுடைய பூர்வாசார்யர்களை முன்னிறுத்தி விண்ணப்பம் செய்தது குற்றமே ஆகும் என்று எல்லையற்ற சுழற்சி உண்டாகும். “இவ்விதம் விண்ணப்பம் செய்தல் என்பது இதனால் ஏற்படும் பாபம் மற்றும் இதற்கு முன்பாக செய்தப் பாபங்கள் ஆகிய அனைத்தையும் நீக்குவதற்காகவே ஆகும்” என்று கூறினால், இதே போன்று ப்ரபத்தி என்பதும் அதனால் ஏற்படும் பாபம் மற்றும் இதற்கு முன்பாக செய்தப் பாபங்கள் ஆகிய அனைத்தையும் நீக்குவதற்காகவே ஆகும் என்று உரைக்கலாம் அல்லவோ? இப்படியாகத் தவறான வாதங்களை ஏற்றுக் கொண்டால், பூர்வாசார்யர்களும் ப்ரபத்தியைச் செய்ததால் பாபம் நிறைந்தவர்களே ஆவார்கள் என்பதால், அவர்களுக்கு மரியாதை அளித்தல் என்பது சரியல்ல என்றாகிவிடும். ஆகவே இந்த ச்லோகத்தின் தொடக்கம் மற்றும் இறுதி ஆகியவற்றில் ஆளவந்தார் தனது பூர்வாசார்யர்களிடம் செய்த விண்ணப்பம் என்பது ப்ரபத்தியின் ஒரு அங்கம் என்பதாலோ அல்லது தான் முன்பு செய்த ப்ரபத்தியில் உள்ள குறைகளை நீக்குவதற்காகவோ ஆகும். இவ்விதம் ஆசார்யர்களை முன்னிறுத்திச் செய்வது போன்று ப்ரபத்தியிலும் வேறு ஒருவருடைய (பகவான்) எண்ணத்தை அடியாக்கிக் கொண்டு செய்வதில் தோஷம் இல்லை.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச் செய்த

# ஆசார்ய ஹ்ருதயம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 95)

**வ்யாக்யானம் -** [3] (ஊனமில் மோக்ஷபலமான முடிச்சோதியில நுபவத்தாலே நித்ய வஸ்து நீடு பெற்று) "ஊனமில் மோக்க மென்கோ" என்று ப்ரகாரமான ஆத்மாநுபவமாத்ரத்தி லன்றிக்கே ப்ரகாரியளவும் செல்லவநுபவிக்கையாலே குறைவில்லாததாய், ஸ்வரூபாநு ரூபமாகக் கீழில் பத்தில் அறுதியிட்ட பரமபுருஷார்த்த லக்ஷண மோக்ஷத்துக்கு பலம் பகவதநுபவ கைங்கர்யங்களாகையாலே, "முடிச்சோதி" என்கிற திருவாய்மொழியிலே அவன் வடிவழகையும் ஆபரணச் சேர்த்தியையுமநுபவித்து, அவை பரிச்சேதித்த நுபவிக்க வொண்ணாமையாலே இது கரண ஸங்கோச நிபந்தருமென்று நினைத்து இவர் படுகிற க்லேசத்தை விஷய வைலக்ஷண்ய நிபந்தநமென்றறிவித்து ஈச்வரன் நிவ்ருத்தமாக்க, அவ்வநுபவத்தாலே "பெற்றது நீடுயிரே" என்று நித்ய வஸ்து ஸத்தை பெற்று.

**விளக்கம் –** (ஊனமில் மோக்ஷபலமான) – திருவாய்மொழி (3-4-7) - ஊனமில் மோக்க மென்கோ - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனுடைய சரீரமாக உள்ள ஆத்ம அனுபவம் என்பது மட்டும் அல்லாமல், அந்தச் சரீரத்தின் உயிராக நிற்கும் அவன்வரை சென்று அனுபவிப்பதன் விளைவாகச் சிறிதும் குறைவு அற்றதாகவும், ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஏற்றதாக இரண்டாவது பத்தில் உறுதிபட உரைக்கப்பட்டதும், உயர்ந்த புருஷார்த்த லக்ஷணத்தைக் கொண்ட மோக்ஷத்தின் பலனாக உள்ளதும் ஆகிய பகவத் அனுபவம் மற்றும் கைங்கர்யங்கள் என்பவையாக உள்ளதால், (முடிச்சோதி அனுபவத்தாலே) - திருவாய்மொழி (3-1-1) – முடிச்சோதி - என்ற திருவாய்மொழியில் அவனுடைய வடிவழகு மற்றும்

ஆபரணங்களுடன் சேர்ந்த அழகு ஆகியவற்றையும் அனுபவித்து. (நித்யவஸ்து நீடு பெற்று) – அவற்றை அளவுப்படுத்தி அனுபவிக்க இயலாமல் உள்ளதால், இத்தகைய நிலையானது தனது இந்த்ரியங்களில் உள்ள குறைவு காரணமாக ஏற்பட்டது என்று எண்ணி இவர் வருத்தப்பட்டு நின்றார். அப்போது ஈச்வரன் ஆழ்வாரிடம், “இத்தகைய நிலையானது நம்முடைய மேம்பட்ட வேறுபாடு காரணமாக உள்ளதாகும்”, என்று உரைத்து அவருடைய வருத்தத்தை விலக்கினான். அந்த அனுபவம் காரணமாக ஆழ்வாரும் திருவாய்மொழி (3-2-10) - பெற்றது நீடுயிரே – என்று நித்யமாக உள்ள ஆத்மாவின் இருப்பை அடைந்தவராக.

**வ்யாக்யானம்** - (அவச்சேதமற்ற வடிமை செய்ய வேண்டும்படி) ஸத்தாகார்யமும் பலிக்க வேண்டுகையாலே “ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்ய வேண்டும் நாம்” என்று தேசகாலாவஸ்தா ப்ரகாரங்களையிட்டு அவச்சேதியாதபடி ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்த்தைகளிலும் ஸர்வவித கைங்கர்யங்களும் செய்ய வேண்டும்படியான அபிநிவேசத்தாலே. (ஸர்வாத்ம பாவத்தைப் புகழ்ந்து) தம்முடைய பாரிப்புக்கீடாகத் தம்மையடிமை கொள்ளும்படி கோலி, அவன் காட்டிக் கொடுத்த ஸர்வாத்ம பாவத்தை “புகழுநல்லொருவனிலே”, பூதங்கள் பௌதிகங்கள் உஜ்ஜ்வலமான மாணிக்யாதிகள் ரஸவத் பதார்த்தங்கள், காநாதி சப்தராசிகள், மோக்ஷாதி புருஷார்த்தங்கள் ஜகத்ப்ரதாநரான ப்ரஹ்மருத்ராதிகள், இவற்றுக்கடைய காரணமான ப்ரக்ருதி புருஷர்கள், இவற்றையடைய விபூதியாகவுடையனாய், இவற்றிலே அந்தராத்மதயா வ்யாபித்து தத்கத தோஷைரஸம்ஸ்ப்ருஷ்டனா யிருக்கிறபடியைப் பேசி அவ்வநுபவத்தாலே ப்ரீதராய்.

**விளக்கம்** – (அவச்சேதமற்ற வடிமை செய்ய வேண்டும்படி) - உயிர் தரித்திருப்பதற்கான செயலும் நிறைவேறவேண்டும் என்பதால், திருவாய்மொழி (3-3-1) - ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்ய வேண்டும் நாம் - என்று இன்ன இடம், இன்ன காலம், இன்ன நிலை, இன்ன கைங்கர்யம் என்று ஒரு குறிப்பிட்ட எல்லைகளுக்குள் அடங்காதபடியாக, அனைத்து இடங்களிலும் அனைத்து காலங்களிலும் அனைத்து நிலைகளிலும்

அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்யவேண்டும் என்று ஏற்பட்ட ஆசை காரணமாக. (ஸர்வாத்ம பாவத்தைப் புகழ்ந்து) - அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்ய வேண்டும் என்பதான தனது பாரிப்புக்கு ஏற்றபடி தன்னை அடிமையாகக் கொள்ளும்படியாக விண்ணப்பித்து, அவன் காண்பித்துக் கொடுத்ததான "அனைத்து சேதன அசேதனங்களுக்கும் ஆத்மாவாக இருத்தல்" என்ற தன்மையைத் திருவாய்மொழி (3-4) – புகழும் நல் ஒருவனில் - என்பதில் பஞ்சபூதங்கள், மற்ற பொருள்கள், ஒளியுடன் கூடிய மாணிக்கம், இசை போன்று ஓசைகள், மோக்ஷம் முதலான புருஷார்த்தங்கள், உலகில் முதன்மையானவராக உள்ள நான்முகன் மற்றும் ருத்ரன் போன்றவர்கள், இவை அனைத்திற்கும் காரணமாக உள்ள ப்ரக்ருதி மற்றும் புருஷன் முதலான அனைத்தையும் தனது செல்வமாகக் கொண்டவனாகவும், இவை அனைத்திலும் அவற்றுடைய தோஷங்கள் ஏதும் தன்னை வந்து தீண்டாதபடி உள்ளவனாகவும் இருக்கின்ற நிலையை உரைத்து, அந்த அனுபவத்தால் ப்ரீதி அடைந்தவராக.

**வ்யாக்யானம்** - [4] (சொல்லிப்பாடி யேத்திப் பிதற்றி யெழுந்தும் பறந்தும் துள்ளிக் குனித்துத் தடுகுட்டக் கும்பிடு நட்டமிட்டுச் சிரிக்கக் குழைந்து நையும் ப்ரீதிகள்) "எம்மானைச் சொல்லிப்பாடி", "பண்கள் தலைக்கொள்ளப்பாடி", "முனிவின்றியேத்தி", "பேர் பல சொல்லிப் பிதற்றி", "எழுந்தும் பறந்தும் துள்ளாதார்", "ஏத்திக் குனிப்பார்", "தடுகுட்டமாய்", "கும்பிடு நட்டமிட்டாடி", "உலோகர் சிரிக்க நின்றாடி", "நெஞ்சங் குழைந்து நையாதே" என்று வாசிக காயிக மாநஸ வ்யாபாரங்களாலே களிக்கும்படி அந்த ப்ரீதி தலைமண்டையிட்டுச் செல்ல, (தம்மடி யாரென்ன உடன் கூடும் ஸாத்யம் வளர) இப்படியுண்டான ப்ரீதி அவனளவில் பர்யவஸியாதே, "தம்மடியாரடியார் தமக்கடியா ரடியார் தம்மடியாரடி யோங்களே" என்று ததீய சேஷத்வத்தி னெல்லையிலே நிற்கிறவர்கள் நமக்குத்தேச்ய ரென்னும்படி, "அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்று கொலோ" என்று கீழ்ப்பத்தில் ப்ரார்த்தித்த ஸாத்யம் அவர்களோடே கூடி அவனை யனுபவிக்குமளவன்றிக்கே அவனடியாருடைய சேஷத்வத்தி னெல்லையளவும் செல்ல வளர.

**விளக்கம்** – (சொல்லி) – திருவாய்மொழி (3-5-1) – எம்மானைச் சொல்லிப்பாடி – என்றும், (பாடி) - திருவாய்மொழி (3-5-2) – பண்கள் தலைக்கொள்ளப்பாடி – என்றும், (ஏத்தி) - திருவாய்மொழி (3-5-6) – முனிவின்றி ஏத்தி – என்றும், (பிதற்றி) - திருவாய்மொழி (3-5-8) - பேர் பல சொல்லிப் பிதற்றி - என்றும், (எழுந்தும் பறந்தும் துள்ளி) - திருவாய்மொழி (3-5-1) - எழுந்தும் பறந்தும் துள்ளாதார் - என்றும், (குனித்து) - திருவாய்மொழி (3-5-6) – ஏத்திக் குனிப்பார் – என்றும், (தடுகுட்டம்) - திருவாய்மொழி (3-5-3) – தடுகுட்டமாய், (கும்பிடு நட்டமிட்டு) - திருவாய்மொழி (3-5-4) – கும்பிடு நட்டமிட்டாடி - என்றும், (சிரிக்க) - திருவாய்மொழி (3-5-3) – உலோகர் சிரிக்க நின்றாடி - என்றும், (குழைந்து நையும் ப்ரீதிகள்) - திருவாய்மொழி (3-5-7) – நெஞ்சங் குழைந்து நையாதே – என்றும் கூறுவதற்கு ஏற்ப வாக்கு, மனம் மற்றும் சரீரம் ஆகியவற்றின் செய்கைகள் மூலம் களித்திருக்கும்படியாக அந்த ப்ரீதியானது வளர்ந்தபடி இருக்க. (தம்மடி யாரென்ன உடன் கூடும் ஸாத்யம் வளர) - இவ்விதம் உண்டான ப்ரீதியானது அவன் வரை சென்று நின்று விடாமல், திருவாய்மொழி (3-7-10) – தம் அடியார் அடியார் தமக்கு அடியார் அடியார் தம் அடியார் அடியோங்களே – என்பதற்கு ஏற்ப, “அவனுடைய அடியார்களுக்கு அடிமையாக நிற்பது என்ற எல்லையில் நிற்பவர்களே நம்மால் ஏற்கப்படவேண்டியவர்கள்” என்பது வெளிப்படும்படியாக, திருவாய்மொழி (2-3-10) - அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்று கொலோ – என்று இரண்டாம் பத்தில் ப்ரார்த்தனை செய்த பேறானது, அவர்களுடன் சேர்ந்து நின்று அவனை அனுபவித்தல் என்பதுடன் மட்டும் நிற்காமல், அவனுடைய அடியார்களுக்கு அடிமை செய்தல் என்ற எல்லைவரை வளர்ந்தபடி உள்ளபோது.

**வ்யாக்யானம்** – [5] (பைகொள் பாம்புபோலே இந்த்ரிய வ்ருத்தி நியமமற) “பைகொள் பாம்பேறியுறை பரனே” என்று அவனுடைய ஸர்வாதிகத்வ ப்ரகாசகமான படுக்கையாயிருக்கும் திருவநந்தாழ்வான், “சக்ஷுச்ச்ரவா” என்கிறபடியே ஒரு கரணத்தாலே கரணாந்தர வ்ருத்தியையும் கொள்ளுமாபோலே, “நெஞ்சமே நீணகராகவிருந்த வென் தஞ்சனே”, “வாசகமே யேத்தவருள் செய்யும் வானவர்தம் நாயகனே”, “கைகளாலாரத் தொழுது தொழுதுன்னை”, “கண்களால் காணவருங்கொல்” இத்யாதிகளாலே வாக் பாணி சக்ஷுச் ச்ரோத்ரங்களான இந்திரியங்கள் மநோ வாக் பாணி சக்ஷுர் வ்ருத்திகளை யாசைப்படும்படி

யாகையாலே இந்த்ரிய வ்ருத்தி நியமமின்றிக்கே அவனை யநுபவிக்க வேண்டும்படியான பெருவிடாயையுடையராய். (பாடவந்த கவியன்றிக்கே படைத்தான் ச்லோக க்ருத்தாய்) "வாய்கொண்டு மானிடம் பாட வந்த கவியேனல்லேன்" என்று இதர ஸ்தோத்ரத்துக்கு அநர்ஹகரணராய், "ஒன்றியொன்றியுலகம் படைத்தான் கவியாயினேற்கு" என்று ஜகத் ஸ்ருஷ்டி முகத்தாலே தம்முடைய உஜ்ஜீவநத்துக்கு க்ருஷி பண்ணின ஸர்வேச்வரன் விஷயத்திலே, "அஹம் ச்லோக க்ருத் அஹம் ச்லோக க்ருத்" என்கிற உபநிஷத்தின்படியே கவிபாடுமவருமாய்.

**விளக்கம்** - (பைகொள் பாம்புபோலே இந்த்ரிய வ்ருத்தி நியமமற) - திருவாய்மொழி (3-8-4) - பைகொள் பாம்பேறியுறை பரனே - என்று கூறுவதற்கு ஏற்ப அனைத்தைக் காட்டிலும் உயர்ந்தவனாக உள்ளவன் எனபதை வெளிப்படுத்தும்படியான படுக்கையாக உள்ள ஆதிசேஷன், சக்ஷுச்ச்ரவா – கண்களையே காதுகளாக – என்பதற்கு ஏற்ப ஒரு இந்த்ரியம் மூலம் மற்றொரு இந்த்ரியத்தின் செயல்ளைச் செய்வது போன்று, திருவாய்மொழி (3-8-2) - நெஞ்சமே நீணகராகவிருந்த வென் தஞ்சனே - என்றும், திருவாய்மொழி (3-8-3) – வாசகமே யேத்தவருள் செய்யும் வானவர்தம் நாயகனே – என்றும், திருவாய்மொழி (3-8-4) - கைகளாலாரத் தொழுது தொழுதுன்னை - என்றும், திருவாய்மொழி (3-8-5) - கண்களால் காணவருங்கொல் - என்றும் உள்ள பாசுரங்கள் மூலம் வாக்கின் செயலை மனமும், கைகளின் செயலை வாக்கும், கண்களின் செயலைக் கைகளும், காதுகளின் செயலைக் கண்களும் செய்ய விரும்புவதால், இந்த்ரியங்களுடைய செயல்பாடுகள் எந்த விதிமுறைகளுக்கும் உட்படாமல் அவனை அடைந்து அனுபவிக்கவேண்டும் என்ற பெருந்தாகம் மட்டுமே கொண்டவராக. (பாடவந்த கவியன்றிக்கே படைத்தான் ச்லோக க்ருத்தாய்) - திருவாய்மொழி (3-9-9) - வாய்கொண்டு மானிடம் பாட வந்த கவியேனல்லேன் - என்று மற்ற எதனைக் குறித்தும் கவிப்பாடுவதற்கான தகுதி அற்ற இந்த்ரியங்களைக் கொண்டவராக, திருவாய்மொழி (3-9-10) - ஒன்றியொன்றியுலகம் படைத்தான் கவியாயினேற்கு - என்பதற்கு ஏற்ப ஜகத்தை ஸ்ருஷ்டித்த செயல் மூலமாக தான் கரையேறுவதற்கான செயல்களைச் செய்த ஸர்வேச்வரன் விஷயத்தில், அஹம் ச்லோக க்ருத் அஹம்

ச்லோக க்ருத் - நான் கவி பாடுபவன், நான் கவி பாடுபவன் - என்றுள்ள உபநிஷத் வாக்கியத்தின்படி கவி பாடுபவராக.

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்வாமி அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 240)

3-9-6 வம்மின் புலவீர்! நும் மெய்வருத்திக் கைசெய்துய்ம்மினோ
இம்மன்னுலகினில் செல்வரிப் போதில்லை நோக்கினோம்
நும்மின் கவிகொண்டு நும்நுமிட்டா தெய்வமேத்தினால்
செம்மின் சுடர்முடி என் திருமாலுக்குச் சேருமே

**பொருள்** - புலவர்களாக உள்ளதால் சிறந்த ஞானம் கொண்டுள்ள நீங்கள் மற்ற விஷயங்களைத் தவிர்த்து இங்கு வாருங்கள். உங்களுடைய சரீரத்தை வருத்திக் கொண்டு, உங்களுக்கு ஏற்ற செயலைச் செய்தபடி பிழைப்பீர்களாக. பரந்து விரிந்துள்ள இந்தப் பூமியில், செல்வம் நிறைந்தவர்கள் இந்தக் காலத்தில் யாரும் இல்லை என்று ஆராய்ந்து பார்த்தோம். இனி உங்களுடைய இனிமையான கவிகளைக் கொண்டு உங்களுக்கு விருப்பமான தேவதைகளைத் துதிப்பதால், நீங்கள் உரைக்கின்ற குணங்கள் ஏதும் அவர்களுக்கு இல்லாத காரணத்தால், அந்தத் துதிகள் அனைத்தும் அவர்களைச் சென்றடையாமல், தடையற்ற ஒளிவீசும் முடிசூடியவனும் எனக்கும் ஸ்வாமியாக உள்ளவனும் ஆகிய மஹாலக்ஷ்மியின் நாயகனுக்கே வந்து சேரும்.

**அவதாரிகை** – "ஜீவநார்த்தமாக மநுஷ்யாதிகளைக் கவிபாடுகிறோம்", என்ன; "க்ஷுத்ரரைக் கவிபாடி ஜீவிப்பதிலும் உடம்பு நோவப் பணி செய்து ஜீவிக்கை நன்று" என்கிறார்.

**விளக்கம்** - கவிஞர்களில் சிலர் நம்மாழ்வாரிடம், "எங்களுடைய வாழ்க்கை பிழைப்பிற்காக நாங்கள் மனிதர்கள் முதலானவர்களைக் கவிபாடுகிறோம்" என்றனர். இதற்கு ஆழ்வார், "தாழ்ந்த மனிதர்களைக் கவிபாடி அதன் மூலம் வாழ்வதைக் காட்டிலும், சரீரத்தை வருத்தியபடி ஏதேனும் தொழில் செய்தலே சிறந்தது", என்று கூறுகிறார்.

**வ்யாக்யானம்** - (வம்மின்) காட்டுத்தீயிலே அகப்பட்டாரை மடுவைக் காட்டி அழைப்பாரைப்போலே "வாருங்கள்" என்கிறார். (புலவீர்) நல்லதறியும் நீங்கள் வாருங்கோள். "எங்களை நீர் அழைக்கிறதென்? எங்களுடைய தேஹயாத்ரை நடக்க வேண்டாவோ, பிறரைக் கவிபாடியாகிலும்?", என்ன; மெய்யே ஜீவிக்க வேண்டினாலும் உங்கள் தரம் குலைய ஜீவிக்கவேணுமோ? உங்கள் தரம் குலையாமல் ஜீவிக்க வொண்ணதோ? (நும் மெய் இத்யாதி) உங்கள் சரீரத்தை வருத்தியும் கைத்தொழில் செய்தும் ஜீவிக்கப் பாருங்கோள். இதுக்கு எம்பார் அருளிச்செய்யும்படி, "கோட்டை சுமத்தல், புற்சிரைத்தல் செய்யமாட்டீர்களோ?" என்று. "அத்தால் எங்களுக்குப் பூர்ணமாக ஜீவிக்கக் கிடையாதே! பிறரைக் கவிபாடினால் எங்களுக்கு வேண்டுவது வாங்கி ஜீவிக்கலாம்" என்ன.

**விளக்கம்** - காட்டித்தீயில் சிக்கித் தவிப்பவர்களை, அங்குள்ள மடு ஒன்றைக் காண்பித்து அழைப்பது போன்று, "வாருங்கள்" என்கிறார். (புலவீர்) - நல்லவை எவை என்று அறிபவர்களே, வாருங்கள். இதற்கு அவர்கள், "எங்களை நீவிர் ஏன் அழைக்கிறீர்? மற்றவர்களைக் கவிபாடியாவது எங்களுடைய வாழ்க்கையை நாங்கள் நடத்த வேண்டாமோ?", என்றனர். இதற்கு ஆழ்வார், "உண்மையே; வாழவேண்டும் என்றாலும், உங்களுடைய தரம் தாழ்ந்து நீங்கள் வாழவேண்டுமா? உங்களுடைய தரத்தை தாழ்த்திக் கொள்ளாமல் நீங்கள் வாழ இயலாதா?", என்கிறார். (நும் மெய் இத்யாதி) - உங்களுடைய சரீரத்தை வருத்தியபடியும், கைத்தொழில் ஏதேனும் செய்தபடியும் வாழ முயற்சி செய்யுங்கள். இதற்கு ஸ்வாமி எம்பார், "மூட்டை தூக்கியும், புல்லைச் செதுக்கியும் வாழலாம் என்று பொருள்", என அருளிச்செய்வார். இதற்கு அந்தப் புலவர்கள், "அதன் மூலம் எங்களுக்குத் தேவையான பரிபூர்ணமான வாழ்க்கை கிட்டாது. ஆனால் மற்றவர்களைப் புகழ்ந்து

கவிபாடினால், எங்களுக்குத் தேவையானவற்றை வாங்கி வாழ முடியும்", என்றார்கள்.

**வ்யாக்யானம் -** அது ஆமிறே பெறில், (இம்மன்னுலகினில் செல்வர் இப்போதில்லை நோக்கினோம்) ப்ரவாஹ ரூபேண நித்யமான இந்த லோகத்தில் உங்கள் கவிகேட்டு இதுக்குத் தரமாகத் தருகைக்கு உதாரராயிருக்கும் ஸ்ரீமான்கள் இல்லை. (இப்போது நோக்கினோம்) "இவர்கள் நெஞ்சு கன்றக் கவிபாடுகிற இதுக்கு ப்ரயோஜநமுண்டோ?" என்று இப்போது ஆராய்ந்து பார்த்தோம்; ஒருவருமில்லையாயிருந்தது. அர்த்தாந்தரமாகில், "இப்போது இல்லை" என்ன வேண்டாவே முன்புமில்லையே. முன்பு இவர்தாம் லோகயாத்ரையில் கண் வைக்குமவரன்றே, "இவர்கள் வ்யர்த்தமே துக்கப்படுகிறார்களோ? ஏதேனும் ப்ரயோஜநமுண்டோ?" என்று இப்போது பார்த்தோம் என்கிறார்.

**விளக்கம் -** இதற்கு நம்மாழ்வார், "அது சரியே ஆகும். ஆனால் நீங்கள் எண்ணியதைப் பெற்றால் மட்டுமே அல்லவோ அது நிகழும்?", என்கிறார். (இம்மன்னுலகினில் செல்வர் இப்போதில்லை நோக்கினோம்) - தொடர்ந்தபடி உள்ளதான அநித்யமான இந்த லோகத்தில் உங்களுடைய கவிகளைக் கேட்டு, அதற்கு ஏற்றபடியான பொருள் அளிப்பதற்குத் தாராளமான செல்வம் கொண்டவர்கள் யாரும் இல்லை. (இப்போது நோக்கினோம்) - இவர்கள் இவ்விதம் உள்ளம் நெகிழக் கவிபாடுகிறார்களே. அதற்குப் பயன் உள்ளதா?", என்று இப்போது ஆராய்ந்து நோக்கினோம்; ஆனால் யாரும் இல்லை. "இங்கு இப்போது நோக்கினோம்" என்று வ்யாக்யானம் செய்வதற்குப் பதிலாக, இங்குள்ள சொற்கள் போன்றே "இப்போதில்லை நோக்கினோம்" என்று கூறலாம் அல்லவா என்பதற்கு விடை அளிக்கிறார். இதன் கருத்தானது, "இப்படிப்பட்ட செல்வந்தர்கள் முன்பும் இல்லை என்பதால், இப்போதும் இல்லை என்று கூறவேண்டாம்", என்பதாகும். ஆனால் நம்மாழ்வார் இது போன்று உலகவாழ்க்கை குறித்து ஆராயமாட்டார் அல்லவோ? இப்போது ஏன் செய்கிறார் என்ற கேள்வி எழலாம். இதற்குக் காரணம், "இவர்கள் வீணாகத் துக்கம் கொள்கிறார்கள். இதனால் ஏதும் பயன் உள்ளதா?" என்பதாகும்.

**வ்யாக்யானம்** – “மநுஷ்யரிலனறோ இல்லாதது. தேவர்கள் மநுஷ்யரில் வ்யாவ்ருத்தரே. இக்கவிகளைக் கொண்டு எக்களுடைய இஷ்டதேவதைகளை ஸ்தோத்ரம் பண்ணுகிறோம்” என்ன. (நும் இத்யாதி) உங்களுடைய இனிய கவிகளைக் கொண்டு, ராஜஸராயும் தாமஸராயும் இருக்கிற உங்களுக்குப் பொருந்தும் ராஜஸராயும் தமஸராயுமுள்ள தேவதைகளை ஸ்துதித்தால், அது (செம்மின் இத்யாதி) நீங்கள் சில ஏற்றங்களைச் சொல்லியிறே கவிபாடுவது; அது அவர்களுக்குக் கூடாது; “புண்டரீகாக்ஷன்” என்றால் அது உள்ளவிடத்தே போம்; விரூபாக்ஷன்பக்கல் போகாதே; ஆகையாலே, ஆதிராஜ்ய ஸூசகமான திருவபிஷேகத்தையுடைய ஶ்ரிய:பதி பக்கலிலே வந்து சேரும். ஆகையால், உங்களுக்கு ஸித்திப்பது சௌர்யபலமே. “ஸர்வாதிகன், ஸமஸ்த கல்யாணகுணாத்மகன், ஸர்வரக்ஷகன்” என்றாற்போலேயிறே கவிபாடுவது; அது உள்ளவிடத்திலே வந்து சேருமிறே. அப்ரதிஹத ப்ரகாசமான தேஜஸ்ஸை யுடைத்தா யிருக்கிற திருவபிஷேகத்தையுடையனான. (என் திருமாலுக்குச் சேரும்) உங்கள் ப்ரதிபத்தியொழிய கவியின் ஸ்வபாவத்தாலும் ஶ்ரிய:பதிக்குச் சேரும். “ஒண்டாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு” என்கிறபடியே ஜ்ஞாநமாகில் அவனையே நோக்குமாபோலே, கவிகளானவை சப்த ஸந்தர்ப்பமாயிருக்கையாலே, ஸர்வ சப்தவாச்யன் அவனாகையாலும் அவனுக்கே சேரும். அதாவது, ஸர்வ சப்தங்களும், அசித்தும் ததபிமாநி ஜீவனும் ததந்தர்யாமியான பரமாத்மாவுமான இஸ்ஸங்காதத்துக்கு வாசகங்களாகையாலே விசேஷ்ய ப்ராதாந்யத்தாலே அவனையே சொல்லிற்றாம். “யே யஜந்தி” இத்யாதிவத்.

**விளக்கம்** – இதனைக் கேட்ட சில புலவர்கள், “நீவிர் கூறியது போன்று மனிதர்களில் செல்வந்தர்கள் யாரும் இல்லை. ஆனால் தேவர்கள், மனிதர்களைக் காட்டிலும் வேறுபட்டவர்கள் ஆவார்கள். ஆகவே இந்தக் கவிகள் கொண்டு எங்களுக்கு விருப்பமான தேவதைகளைத் துதித்தோம்”, என்றார்கள். இதற்கு விடை அளிக்கிறார். (நும் இத்யாதி) - உங்களுடைய கவிகள் கொண்டு, ராஜஸம் மற்றும் தாமஸம் நிறைந்த நீங்கள், உங்களுக்கு ஏற்புடையவிதத்தில் ராஜஸம் மற்றும் தாமஸம் நிறைந்த தேவதைகளைத் துதித்தால், அத்தகைய துதியானது, (செம்மின் இத்யாதி) - நீங்கள் ஒரு சில ஏற்றங்களை உள்ளடக்கியே கவிகள்

கூறுகிறீர்கள்; ஆனால் அந்த ஏற்றங்கள் அவர்களுக்குப் பொருந்தாது. “புண்டரீகாக்ஷன் - தாமரை போன்ற கண்கள் கொண்டவன்” என்பது அது போன்ற கண்கள் கொண்டவனுக்குப் பொருந்தும் அல்லாமல், தாறுமாறான கண்கள் கொண்டவனுக்குப் பொருந்தாது அல்லவோ? எனவே அந்தத் துதிகள் அனைத்தும், அனைத்திற்கும் எஜமானன் என்பதை மறைமுகமாக உணர்த்துகின்ற ஒளி பொருந்திய முடியைக் கொண்ட மஹாலக்ஷ்மியின் நாதனையே வந்து சேரும். எனவே உங்களுக்கு கிடைப்பதும் கனவின் பலனே ஆகும். “அனைத்தையும் ஆள்பவன், அனைத்து கல்யாண குணங்களுக்கும் இருப்பிடமாக உள்ளவன், அனைத்தையும் காப்பவன்” போன்ற பலவும் உரைத்து அல்லவோ கவிகள் உள்ளன; இவை அனைத்தும் அந்தத் தன்மைகள் உள்ள இடத்திற்கு அல்லவோ வந்து சேரும்? எந்தவிதமான தடையும் இல்லாதபடி, எங்கும் பரவியபடி உள்ள ப்ரகாசம் நிறைந்த திருமுடியைக் கொண்டவனாகிய. (என் திருமாலுக்குச் சேரும்) - உங்களுடைய நினைவு மட்டும் அல்லாமல், கவியின் இயல்பு காரணமாகவும் மஹாலக்ஷ்மியின் நாயகனையே வந்து சேரும். முதல்திருவந்தாதி (67) - ஒண்டாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு – என்பதற்கு ஏற்ப ஞானம் என்றால் அது அவனையே ஆராய்ந்து அறிந்தல் என்பது போன்று, கவிகள் என்பவை அனைத்து சொற்களின் கலலையாக உள்ளதால், அனைத்து சொற்களாலும் கூறப்படுபவன் அவனே என்பதால், அவனையே வந்தடையும். அதாவது அனைத்து சொற்களும் அசித்தாக உள்ள சரீரமும், அந்தச் சரீரத்தால் கொண்டாடப்பட்டபடி உள்ள உயிரும், அவற்றின் அந்தர்யாமியாக உள்ள பரமாத்மாவாகிய இந்தக் கூட்டத்திற்கு வாசகங்கள் என்பதால், சிறப்பாக உரைத்தாலும் அவனையே சென்றடையும். தக்ஷ ஸ்ம்ருதி - யே யஜந்தி - யார் பித்ருக்கள், தேவர்கள், அக்னியுடன் சேர்ந்த அந்தணர்கள் ஆகியவர்களைப் பூஜிக்கிறார்களோ அவர்கள் விஷ்ணுவையே பூஜித்தவர் ஆகிறார்கள் - என்றது காண்க.

3-9-7 சேருங் கொடைபுகழெல்லை யிலானை ஓராயிரம்
பேருமுடைய பிரானையல்லால் மற்று யான்கிலேன்
மாரியனைய கை மால்வரையொக்கும் திண்தோளென்று
பாரிலோர் பற்றையைப் பச்சைப் பசும்பொய்கள் பேசவே

**பொருள்** – தனக்குச் சேரும்விதமாக உள்ள கொடை, அதன் மூலம் வந்த புகழ், இவை அனைத்தும் எல்லை காண இயலாதபடி உள்ளவனும், ஒப்பில்லாத ஆயிரம் திருநாமங்களைக் கொண்டவனும் ஆகிய மஹா உபகாரகனை அல்லாமல், "கைகள் மேகத்தைப் போன்று பெரிதாக உள்ளன, உறுதியான தோள்கள் மலைகளைப் போன்று உள்ளன" என்று சிறிதளவும் உண்மை இன்றி உள்ள பொய்களை உரைக்க நான் தகுதி கொண்டவன் அல்லேன்.

**அவதாரிகை** - வழிபறிக்கும் நிலத்தில் தன் கைப்பொருள் கொண்டு தப்பினவன் உகக்குமாபோலே, "இவர்களைப் போலன்றிக்கே பகவத்விஷயத்தை யொழிய வேறு சிலரைக் கவிபாடுகைக்கு நான் க்ஷமனன்றிக்கே ஒழியப்பெற்றேன்" என்று ப்ரீதராகிறார்.

**விளக்கம்** - வழிப்பறி நடந்த இடத்தில், தான் கொண்ட வந்த பொருள் களவு போகாமல் தப்பித்த காரணத்தால் மகிழ்ந்து நிற்கும் ஒருவன் போன்று, "இவர்களைப் போன்று அல்லாமல் பகவத் விஷயம் தவிர வேறு விஷயங்கள் குறித்துக் கவி பாடுவதற்கு நான் இயலாதவன் மட்டுமே அன்றி, செய்யவும் இல்லை", என்று மகிழ்கிறார்.

**வ்யாக்யானம்** - (சேரும் இத்யாதி) கொடையாலே சேர்ந்த புகழுக்கு எல்லையில்லாதவனை; அன்றிக்கே தகுதியான கொடையாலுண்டான புகழுக்கு எல்லையிலாதவனென்னுதல்; அதாவது, ஒருவன் ஒருவனுக்கு ஒரு பசுக் கொடுத்தானாகில், "இவனுக்கு இதுக்கு அடியேன்?" என்று இருப்பர்கள்; பெருமாள், ஸிம்ஹாஸநமும் ஸ்ரீசத்ருஞ்ஜயனுமகப்படக் கொடுத்து வெறுவியராய் நிற்கிறவளவிலே த்ரிஜடன் வந்து அர்த்திக்க, "ஸரயூ தீரத்துக்கு இவ்வருகுபட்ட பசுக்களையடையக் கொண்டு போ" என்று பெருமாள் கொடுக்க, "பெருமாள் கொடுத்தராகில் சேரும்" என்றார்களிறே; அப்படியே தகுதியான கொடையால் வந்த புகழுக்கு எல்லையில்லாதவனை. இவ்விஷயத்தையாயிற்றுக் கவிபாடுகிறது.

**விளக்கம் -** (சேரும் இத்யாதி) - தகுதியான தானத்தின் மூலம் சேர்வதான புகழுக்கு எல்லை காண இயலாதவனை. ஒருவனுக்கு மற்றொருவன் ஒரு பசுவைத் தானம் அளித்தால், "இதனை அளித்தவனுக்கு இது எவ்விதம் கிடைத்தது? இவ்விதம் கொடுக்கக் காரணம் என்ன?", என்று பலவற்றையும் ஆராய்வார்கள். ஆனால் இராமன் அளித்தால், "பெருமாள் கொடுத்தால் அது பொருத்தமே ஆகும்", என்பர். இது இராமாயணத்தில் உள்ள நிகழ்வாகும். இராமன் தனது ஸிம்ஹாஸநம், ஸ்ரீசத்ருஞ்ஜயன் என்ற தனது பட்டத்து யானை போன்ற பலவற்றையும் தானமாக அளித்த பின்னர் அங்கு த்ரிஜடன் என்பவன் யாசகம் கேட்டு வந்தான். அப்போது இராமன் அவனிடம், "ஸரயூ நதியின் அருகில் உள்ள இந்தப் பசுக்கள் அனைத்தையும் நீ கொண்டு செல்வாயாக", என்று கொடுத்தான். ஆக இவ்விதம் தனக்கு ஏற்புடைய விதத்தில் உள்ள தானத்தால் வந்த புகழுக்கு எல்லை இல்லாதவன். இப்படிப்பட்ட விஷயத்தையே இவர் கவிபாடுகிறார்.

**வ்யாக்யானம் -** (ஓராயிரம் இத்யாதி) கவிபாடுமிடத்தில் ஒன்றிரண்டு பேராய், அதுதானும் ஜலபில என்றாற்போலேயாய் ஒரு சந்தஸ்ஸிலடங்காதபடி இருக்கையன்றிக்கே, நினைத்தபடி பாசுரமிட்டுக் கவிபாடலாம்படி அநேகம் திருநாமங்களை உண்டாக்கி வைத்த மஹோபகாரகனை. (ஓராயிரம்) ஓரொன்றே கவிபாடுகைக்கு விஷயம் போரும்படி அத்விதீயமாயிருக்கை. (பிரானை) அவற்றை எனக்கு ப்ரகாசிப்பித்த மஹோபகாரகனை. (அல்லால் இத்யாதி) இவனையொழிய வேறொருவரைக் கவிபாட நான் சக்தனாகிறிலேன்.

**விளக்கம் -** (ஓர் ஆயிரம் இத்யாதி) - கவிபாடும்போது ஒன்று அல்லது இரண்டு பெயர்கள் மட்டும் கொண்டதாகவும், அத்தகைய பெயர்களும் "ஜலபில" என்று குறிப்பிட்ட சந்தஸ்ஸில் அடக்க இயலாதபடி அல்லாததாகவும் இல்லாமல், நாம் எண்ணியபடி பாசுரம் உரைத்துக் கவிபாடிக் கொள்ளலாமபடி எண்ணற்ற திருநாமங்களைத் தனக்கு உண்டாக்கி வைத்துக் கொண்ட மஹா உபகாரகனை. (ஓர் ஆயிரம்) - ஒன்றிரண்டு திருநாமங்களே கவிபாடுவதற்குப் போதுமானதாகவும், அவை போன்று இரண்டாவது ஏதும் இல்லை என்று கூறலாம்படியாகவும் உள்ள திருநாமங்கள். (பிரானை) - அத்தகைய திருநாமங்களை எனக்கு வெளிப்படுத்தி மிகவும் பெரிய உபகாரம் செய்தவனை.

(அல்லால் இத்யாதி) - இவனை அல்லாமல் வேறு யாரைக் குறித்தும் கவிபாடுவதற்கு நான் சக்தி அற்றவனாக உள்ளேன்.

**வ்யாக்யானம்** - எதுதான் நீர் மாட்டாதொழிகிறது? என்ன, (மாரியனைய கை) கொடுக்கைக்கு முதலன்றிக்கேயிருக்கிறா னொருவனை, "கொடைக்கு மேகத்தை ஒக்கும்" என்கை. அதாது ப்ரயோஜந நிரபேக்ஷமாகக் கொடுக்கையும், கொடுக்கப் பெறாதபோது உடம்பு வெளுக்கையுமாகிற இத்யாதிகள். கையென்றது கொடை. (மால்வரையொக்கும் இத்யாதி) கொடையை நினைத்துத் தேம்புகிற தோளைக் குறித்து, "கொடுத்துப் பணைத்திருக்கிறது" என்றும், "இத்தோள் நிழலிலேயன்றோ லோகமாக ஜீவித்துக் கிடக்கிறது" என்றும். (பாரில் ஓர் பற்றையை) போகபூமியிலுள்ளார் சிலராகில் ஆமிறே; பூமியிலுள்ளார் சிலராய், பற்றையாய்; அதாவது முளைத்தெழுந்து தீந்துபோன சில சிறு தூறு உண்டாயிற்று; அப்படியே, உத்பத்தியே தொடக்கி விநாசத்தளவும், தனக்கு உறுப்பாதல் பிறர்க்கு உறுப்பாதல் செய்யாதவர்களை. அன்றிக்கே, பாரென்று நத்தமாய், அத்தால் ஒரு குடிப்பற்றின்றிக்கே யிருக்கை. (பற்றையை) "கைப்பட்டதை இறுகப் பிடித்து ஒருவர்க்கு ஒன்று ஈயாதவர்களை" என்று ஒரு தமிழன் வ்யாக்யாநம் பண்ணினான். "த்ருணஸமன்" என்று சொல்லிப் போருவது. (பச்சைப் பசும்பொய்கள் பேசவே) மெய் கலவாத பொய்களைச் சொல்ல. "ஆயிரம் பேருமுடைய பிரானையல்லால் மற்று பாரிலோர் பற்றையைப் பச்சைப் பசும்பொய்கள் பேச யான் கிலேன்".

**விளக்கம்** - "எதனைக் குறித்துப் பாடுவதற்கு நீவிர் இயலாமல் உள்ளீர்?" என்று கேட்க, விடை அருளிச்செய்கிறார். (மாரி அனைய கை) - கொடுப்பதற்குத் தன்னிடம் ஏதும் இல்லாத ஒருவனை, "நீ உனது கொடைத்தன்மைக்கு மேகத்தைப் போன்று உள்ளாய்", என்று கூறுதல். அதாவது எந்தவிதமான எதிர்பார்ப்பும் இன்றி அளித்தல், அவ்விதம் அளிப்பதற்கு ஏதும் இல்லாதபோது உடல் வெளுத்துத் தவித்தல் என்பதான தன்மைகள் இன்றி உள்ளவர்களை இவ்விதம் புகழ்டல். "கை" என்றால் "கொடை" என்று பொருள். (மால்வரையொக்கும் இத்யாதி) – கொடையை எண்ணி இளைத்துள்ள தோள்களைக் கண்டு, "அள்ளிக் கொடுத்து பணைத்திருக்கிறது" என்றும், "இந்தத் தோள்களின் நிழலில் அல்லவோ இந்த உலகம் ஜீவித்து நிற்கிறது", என்றும் கூறுதல். (பாரில் ஓர் பற்றையை) "பார்"

என்பது பூமி. பூமியில் உள்ளவர்கள் சிலராய், தூறு போன்று உள்ளவர்களை. அதாவது முளைத்து எழும்போதே அழிந்துபோகும் சில பொருள்கள் உண்டு; அது போன்று உற்பத்தி தொடங்கி அழிவது முடிய, தனக்கும் மற்றவர்களுக்கும் எந்தப் பயனும் இன்றி உள்ளவர்கள். அல்லது "பார்" என்பதற்கு "வீடு" என்று பொருள் கூறலாம்; அதாவது வீடில்லாமல் உள்ளவர்கள்; பற்றை என்பது தனது கையில் அகப்பட்டதைப் பிடித்தபடி, யாருக்கும் அளிக்காமல் உள்ளவர்கள். அதாவது உலர்ந்த புல்லைப் போன்று எதற்கும் பயன் அற்றவர்கள். (பச்சைப் பசும்பொய்கள் பேசவே) - உண்மை சிறிதும் கலக்காதபடியான பொய்கள். ஆயிரம் திருநாமங்கள் கொண்ட அவனை அல்லாமல் இந்த உலகில் தூறு போன்று உள்ள பலவற்றை உரைக்கின்ற பச்சைப் பொய்களை நான் பேச சக்தி அற்றவன் ஆவேன்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி திருவரங்கத்தமுதனார் அருளிச் செய்த

# இராமாநுச நூற்றந்தாதி

இதற்கு ஸ்வாமி பிள்ளைலோகம் ஜீயர் அருளிச் செய்த வ்யாக்யானம் மூலமும், எளிய தமிழ்நடையும்

(பகுதி – 102)

97. தன்னை உற்றாட்செய்யும் தன்மையினோர் மன்னு தாமரைத்தாள்
தன்னை உற்றாட்செய்ய என்னை உற்றான் இன்று தன் தகவால்
தன்னை உற்றார் அன்றி தன்மை உற்றாரில்லை என்றறிந்து
தன்னை உற்றாரை இராமாநுசன் குணம் சாற்றிடுமே

**விளக்கவுரை** - எம்பெருமானாரை மட்டுமே பற்றியுள்ளவர்கள் பலர் உண்டு. இவ்விதம் தன்னைப் பற்றியுள்ளவர்களுக்கு “என்ன உயர்ந்த குணம் உள்ளது, அவர்கள் உயர்ந்த ஸ்வபாவங்கள் என்ன” என்று பலரும் போற்ற வேண்டும் என்பது எம்பெருமானாரின் எண்ணமாகும் (தம் அடியார் தமக்கு அடியார் அடியார் தம் அடியார் அடியோங்களே – என்பது போன்று). ஆனால் இவ்விதம் தன்னை அண்டியவர்களின் பெருமையைப் போற்றக் கூடியவர்கள் யாரும் இல்லை என்று சற்றே மனம் வருந்தினர் போலும். அதனால் எம்பெருமானார் செய்தது என்ன? தனது கருணை காரணமாக, தன்னைத் தவிர (எம்பெருமானாரைத் தவிர) வேறு எதனையும் அறியாதவர்களும், தனக்குக் கைங்கர்யம் செய்வதை மட்டுமே குறிக்கோளாக உடையவர்களும் ஆகிய கூரத்தாழ்வான் போன்றவர்களின் அழகாகப் பொருந்திய தாமரைமலர் போன்ற திருவடிகளுக்குத் தொண்டு புரியும்படி என்னைப் பணித்தார்.

**அவதாரிகை** – கீழ்ப்பாட்டிலே “எம்மிறைவர் இராமாநுன்றன்னை உற்றவரே” என்று “ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்” என்றாப்போலே, எம்பெருமானாரை “தேவு மற்றறியேன்” என்று பற்றியிருப்பாரே “தமக்குறு துணை” என்று இவர் சொன்னவாறே, “உமக்கு அவர்தம் மளவிலன்றிக்கே அங்குத்தைக்கு நிழலும் அடிதாறும்போலே அநந்யார்ஹராயிருப்பாருங்கூட உத்தேச்யரென்றிருக்கைக்கீடான இந்த ருசி வந்த வழிதான் ஏது” என்ன; “திக்குற்ற கீர்த்தி” என்னும்படியான தம்முடைய வைபவத்தைக் கண்களாற் கண்டும் செவிகளாற் கேட்டும் தம் பக்கலிலே அடிமைப்படுவாருமித்தனை யொழித் தமக்கு அநந்யார்ஹராயிருப்பார், பிறர்க்கடிமைப்படுவார் கிடக்கத் தக்காரென்று திருவுள்ளமாய், முந்துறமுன்னம் தம்முடைய ஸம்பந்தி ஸம்பந்திகள் பக்கலிலே என்னை அடிமைப்படுத்தினாராகையாலே, இந்த ருசி அடியேனுக்கு அவர் தம்முடைய க்ருபையாலே வந்தது” என்கிறார்.

**விளக்கம்** - கடந்த பாசுரத்தில் அமுதனார், “எம் இறைவர் இராமாநுசன் தன்னை உற்றவரே என்று, ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் - அனைத்தும், முறையாக எந்தத் திருவடிகளாகவே உள்ளனவோ – என்று கூறுவது போன்று, தேவு மற்றறியேன் – என்பதாகப் பற்றியபடி உள்ளவர்களே தமக்கு உறுதுணையாக இருப்பவர்கள் ஆவர்” என்று உரைத்தார். அப்போது சிலர் அமுதனாரிடம், “உமக்கு அவர்கள் வரை மட்டும் அல்லாமல், அவர்களுடைய பெரியதிருவந்தாதி (31) – நிழலும் அடிதாறும் – என்பது போன்று மற்ற கதி இன்றி உள்ளவர்கள் கூட ஏற்கத்தக்கவர்கள் ஆவர் என்பதாக நீவிர் உரைக்கிறீர். இந்தப் பிடிப்பு ஏற்பட்ட வழிதான் என்ன?”, என்றனர். இதற்கு அமுதனார், “திக்குற்ற கீர்த்தி என்றுள்ளதான தனது வைபவத்தைக் கண்களால் கண்டும், காதுகளால் கேட்டும், அதன் விளைவாகத் தனக்கு மட்டுமே வசப்பட்டு நிற்பவர்களைக் கண்ட எம்பெருமானார், இவ்விதம் உள்ளவர்கள் மற்றவர்களுக்கு வசப்பட்டு நிற்பதற்கு ஏற்றவர்கள் அல்லர் என்று திருவுள்ளம் கொண்டார். ஆகவே தன்னுடைய ஸம்பந்தம் கொண்டவர்களுடன் ஸம்பந்தம் கொண்டவர்களிடம், என்னை வசப்படுத்தினார். எனவே இந்த ஈடுபாடு எனக்கு எம்பெருமானாருடைய க்ருபையால் வந்தாகும்”, என்கிறார்.

**வ்யாக்யானம்** – (தன்னை உற்றாரன்றி) “கலௌ கச்சித் பவிஷ்யதி” என்று நாரத பகவான் சொல்லுகையாலும், பாகவத புத்ரனான ஊமை இவர் தம்முடைய ப்ரபாவத்தைக் கட்டடங்க வெளியிட்டு அங்ஙனே திரோஹிதனாகையாலும், யாதவப்ரகாசன் இவரை வஞ்சிப்பதாக மணிகர்ணிகைக்கு அழைத்துக் கொண்டு போகிறபோது கோவிந்தப் பெருமாள் அச்செய்தியைக் கேட்டு விந்த்யாடவியிலே அறிவித்தவாறே, அங்கே இவர் தனிமைப்பட்டிருக்க அவ்வளவிலே பெருமாள் தாமே இவருக்கு வழி துணையாய் வந்து ஒரு ராத்ரியிலேதானே இவர் தம்மை, “ஒளி மாடங்கள் சூழ்ந்தழகாய கச்சி”த் திருப்பதியிலே சேர்த்தாரென்று சொல்லுகையாலும், இவருக்கு திருக்கச்சிநம்பி முகமாக ஸமஸ்த தத்வார்த்தங்களையும் பேரருளாளர் வெளியிட்டா ரென்கையாலும், திக் விஜயார்த்தமாக தத் தேசங்களிலே சென்று சைவ மாயாவாத ஜைந பௌத்தாதிகளோடே ஸஹஸ்ர முகமாக ப்ரஸங்கித்து அவர்களை பக்நராக்கினார் என்கையாலும், வேங்கடாசல யாதவாசலங்களை நிர்வஹித்தார் என்கையாலும், இச்செய்திகளை அடைவே கண்டும் கேட்டும் லோகத்தாரெல்லாம் வித்தராய், “அவசா: ப்ரதிபேதிரே” என்றாப்போலே தம்மை ப்ராப்யமாகவும் ப்ராபகமாகவும் அத்யவஸித்து ஆச்ரயித்திருப்பாருண்டு இத்தனை ஒழிய.

**விளக்கம்** - (தன்னை உற்றாரன்றி) - அநந்த: ப்ரதமம் ரூபம் லக்ஷ்மணம் ச தத: பர: பலபத்ரஸ் த்ருதீயஸ்து கலௌ கச்சித் பவிஷ்யதி - ஸ்ரீவைகுண்டத்தில் ஆதிசேஷனே முதல் ரூபம்; இராமவதாரத்தின்போது லக்ஷ்மணனாக அவதரித்தது இரண்டாவது ரூபம்; க்ருஷ்ணாவதாரத்தில் பலராமனாக அவதரித்தது மூன்றாவது ரூபம்; நான்காவதாக உள்ள கலிகாலத்தில் ஒரு பெரிய மகானாக ஆதிசேஷனே அவதரிப்பார் – என்று நாரதமஹரிஷி கூறுவதாலும்; பாகவதரின் புத்திரனாகிய ஊமை ஒருவன் எம்பெருமானாருடைய ப்ரபாவத்தை முழுவதுமாக வெளியிட்டதாலும்; யாதவப்ரகாசன் எம்பெருமானாரைக் கொல்வதற்காகக் காசியில் உள்ள மணிகர்ணிகை என்ற இடத்திற்கு அழைத்துச் சென்றபோது அந்த விவரத்தை விந்த்யமலையின் சாரலில் இவரிடம் கோவிந்தப் பெருமாள் உரைத்தார். அப்போது அங்கிருந்து புறப்பட்டுத் தனியாக எம்பெருமானார் நின்றார். அந்த நேரத்தில் ஸர்வேச்வரன் தானே இவருக்கு வழித்துணையாக வந்து, ஒரே இரவில் எம்பெருமானாரை பெரியதிருமொழி - ஒளி மாடங்கள் சூழ்ந்தழகாய

கச்சி - என்பதற்கு ஏற்ப உள்ளதான காஞ்சீபுரத்தில் சேர்த்தான் என்பதாலும்; எம்பெருமானாருக்குத் திருக்கச்சிநம்பிகள் மூலம் அனைத்து தத்துவங்களின் ஆழ்பொருள்களைப் பேரருளாளன் வெளியிட்டான் என்பதாலும்; திக்விஜயமாகப் பல இடங்களுக்கும் சென்று சைவர்கள், மாயாவாதிகள், ஜைனர்கள், பௌத்தர்கள் என்று பலருடனும் ஆயிரம் முகங்கள் கொண்டு வாதம் செய்து அவர்களை நிலைகுலையும்படிச் செய்தார் என்பதாலும்; திருவேங்கடம் மற்றும் திருநாராயாணபுரம் போன்ற இடங்களை நிர்வாஹம் செய்தார் என்பதாலும்; இவை அனைத்தையும் முழுவதுமாகக் கண்டும் கேட்டும் உலகில் உள்ளவர்கல் அனைவரும் வியந்து, மஹாபாரதம் – அவசா: ப்ரதிபேதிரே – பரவசம் அடைந்து நமஸ்காரம் போன்றவற்றைச் செய்தனர் - என்பதற்கு ஏற்ப எம்பெருமானாராகிய தன்னையே அடையும் இலக்காகவும் அடையவைக்கும் வழியாகவும் எண்ணியுள்ளனர் என்று திருவுள்ளம் பற்றி, இதனை அல்லாமல்.

**வ்யாக்யானம் –** (தன்னை உற்றார்) தம்முடைய ஸ்வரூபாநுரூப குண விபவங்களை உள்ளபடி தெளிந்திருக்குமவர்கள். அன்றிக்கே, ஸம்பந்தி ஸம்பந்திக ளளவிலே க்ருபை அதிசயித்திருக்கையாகிற தம்முடைய ஸ்வபாவத்தை உள்ளபடி தெளியப்பெற்றவர்கள் என்னுதல். அமுதனார் தம்முடைய ஸம்பந்தி ஸம்பந்திகள் விஷயத்தில் க்ருபை பண்ண விரும்புவதும், அந்த ஸ்வபாவத்தை உள்ளபடி அறிகைக்கு உத்தேச்யரென்றிறே. எம்பெருமானாருடைய ஸ்வபாவம், தம்மை ஆச்ரயித்து இருக்குமவர்களில்காட்டில் ஸ்வஸம்பந்த ஸம்பந்திகள் விஷயத்தில் க்ருபை அதிசயித்துச் செல்லவேண்டும்படியா யிருக்கும். ஆகையாலிறே, "த்வத் தாஸ தாஸ கணாநா சரம அவதௌ யஸ் தத் தாஸதைக ரஸதா அவிரதா மம அஸ்து" என்று ஜீயரும் ப்ரார்த்தித்தருளினாரிறே. இப்படிப்பட்ட ஸ்வபாவத்தை அறிந்து ஆச்ரயித்தாருடைய.

**விளக்கம் –** (தன்னை உற்றார்) - தனது ஸ்வரூபம், ரூபம், குணம், வைபவம் போன்ற பலவற்றையும் உள்ளதுஉள்ளபடி அறிந்தவர்கள். அல்லது தன்னுடன் ஸம்பந்தம் கொண்டவர்களிடம் ஸம்பந்தம் கொண்டவர்கள் வரை தனது க்ருபை நீள்வதற்குக் காரணமாக உள்ள தனது இயல்பை உள்ளதுஉள்ளபடி அறிந்தவர்கள் எனலாம். எம்பெருமானாருடைய இயல்பானது, தன்னை அண்டி நிற்பவர்களைக் காட்டிலும் அவர்களுடன் ஸம்பந்தம் கொண்டுள்ளவர்கள் முடிய தனது க்ருபை

நீண்டிருக்கவேண்டும் என்று திருவுள்ளம் பற்றுவதாகும்; இது ஏன் என்றால் அமுதனார், எம்பெருமானாராகிய தனது அடியார்களுடன் ஸம்பந்தம் கொண்டுள்ளவர்களுக்கு வசப்பட்ட நிற்க விரும்புவதும், தனது அத்தகைய இயல்பை உள்ளதுஉள்ளபடி அறிவதற்கான தகுதி கொண்டவர் என்பதாலும் ஆகும். இதனையே ஸ்வாமி மணவாளமாமுனிகள் - யதிராஜ விம்சதி (16) - சப்தாதி போக விஷயா ருசி: அஸ்மதீயா நஷ்டா பவதி இஹ பவத் தயயா யதீந்த்ர த்வத் தாஸ தாஸ கணாநா சரம அவதௌ யஸ் தத் தாஸதைக ரஸதா அவிரதா மம அஸ்து - யதிராஜரே! அழியக்கூடிய உலக இன்பங்கள் மீது எனக்கு ஏற்படும் பற்றுகளை நீக்க நீயே அருளவேண்டும். இத்தகைய இன்பங்கள் பின்வரும் நாட்களில் துன்பமே ஏற்படுத்துவதால், இவற்றை உனது கருணை மூலம் நீக்கவேண்டும். என்னை உனது தொண்டனுக்குத் தொண்டனாகக் கொள்ளவேண்டும். இதன் மூலம் நான் உன்னைச் சரணம் என்று பற்றும்படி செய்யவேண்டும். உனக்கு அர்ப்பணிக்க என்னிடம் ஏதும் இல்லை. ஆகவே என்னிடம் இருந்து எதனையும் எதிர்பாராமல் உள்ள உனது கருணை மட்டுமே கொண்டு என்னை நீ காக்க வேண்டும் – என்று ப்ரார்த்தனை செய்தார். இபப்டியாக உள்ள எம்பெருமானாருடைய இயல்பை அறிந்து அண்டி நிற்பவர்களுடைய.

**வ்யாக்யானம் –** (குணம் சாற்றிடும் தன்மையுற்றார்) “எம்மை நின்றாளும் பரமரே”, “நம்மை அளிக்கும் பிராக்களே”, “தம்மடியார் அடியார் தமக்கடியார் அடியார் தம்மடியார் அடியோங்களே”, “சிறு மாமனிசராய் என்னை ஆண்டார் இங்கே திரியவே”, “தொண்டர் சேவடி செழும் சேறு என் சென்னிக்கு அணிவனே”, “கடல்மல்லைத் தல சயநம் ஆர் எண்ணு நெஞ்சுடையார் அவர் எம்மை ஆள்வாரே”, “தண்சேறை எம்பெருமான் தாள் தொழுவார் காணுமென் தலை மேலாரே” என்று ப்ரதம பர்வ நிஷ்டரான ஆழ்வார்கள் ததீய விஷயத்திலே அருளிச்செய்த குணாதிக்யத்தை யிட்டு ஸ்தோத்ரம் பண்ணுகையாகிற ஸ்வபாவத்தை யுடையராயிருப்பார். தன்மை – ஸ்வபாவம், சாற்றுதல் - ப்ரகாசமாகச் சொல்லுதல்.

**விளக்கம்** - (குணம் சாற்றிடும் தன்மையுற்றார்) - திருவாய்மொழி (3-7-1) – எம்மை ஆளும் பரமரே – என்றும், திருவாய்மொழி (3-7-5) – நம்மை அளிக்கும் பிராக்களே – என்றும், திருவாய்மொழி (3-7-10) – தம்மடியார் அடியார் தமக்கடியார் அடியார் தம்மடியார் அடியோங்களே – என்றும், திருவாய்மொழி (8-10-3) – அவனடியார்

சிறுமாமனிசரா யென்னை யாண்டார் இங்கே திரியவே – என்றும், பெருமாள் திருமொழி (2-3) – தொண்டர் சேவடிச் செழுஞ்சேறு என் சென்னிக்கணிவனே – என்றும், பெரியதிருமொழி (2-6-2) – கடல்மல்லைத் தலசயனம் ஆரெண்ணும் நெஞ்சுடையார் அவர் எம்மை ஆள்வாரே – என்றும், பெரியதிருமொழி (7-4-1) – தண்சேறை யெம்பெருமான் தாள் தொழுவார் காண்மின் என் தலை மேலாரே - என்றும் கூறுவதற்கு ஏற்ப, பக்தியின் முதல் நிலையில் நிற்பவர்களாகிய ஆழ்வார்கள், அவனுடைய அடியார்கள் விஷயத்தில் அருளிச்செய்த “குணத்தின் மேன்மை” என்பதை, எம்பெருமானாருடைய அடியார்கள் விஷயத்திலும் கூறித் துதித்தல் என்ற இயல்பைக் கொண்டவர்களாக இருப்பவர்கள்.

**வ்யாக்யானம்** – (இல்லை என்றறிந்து) “தத்ராபி துர்லபம் மந்யே வைகுண்ட ப்ரிய தர்ஸநம்” என்னுமாப்போலே இதுதான் துர்லபம், “விஷயப்ரவணனுக்கு அத்தைவிட்டு, பகவத்விஷயத்திலே வருகைக்குள்ள அருமை போலன்றிறே, ப்ரதம பர்வத்தைவிட்டு சரமபர்வத்திலே வருகைக்குள்ள வருமை” என்றும் சொல்லுகிறபடியே மேட்டுமடையான இவ்வத்யாவஸாயத்தை யுடையவர் ஒருவருமில்லை யென்றறிந்து. இல்லை என்று திருவுள்ளம் பற்றி என்றபடி. இந்த ஸூஷ்மார்த்தத்தைத் தெளிந்திருக்குமவர் இவர் ஒருவருமே யென்றிருக்கிறார் காணும் அமுதனார். (இராமாநுசன்) எம்பெருமானார். தம்முடைய பூர்வாவதாரத்தில் வெளியிடமாட்டாத வர்த்தத்தைக் காணும் இப்போது வெளியிடத் தொடங்கினார்.

**விளக்கம்** – (இல்லை என்றறிந்து) - ஸ்ரீமத்பாகவதம் (11-2-29) - துர்லபோ மாநுஷோ தேஹோ தேஹிநாம் க்ஷணபங்குர: தத்ராபி துர்லபம் மந்யே வைகுண்ட ப்ரிய தர்ஸநம் - உயிர்களுக்கு, க்ஷணநேரத்தில் அழியக்கூடிய மனித சரீரம் கிட்டுவது அரிதாகும்; அது, கிடைத்தபோதிலும் ஸ்ரீவைகுண்டநாதனுடைய ப்ரியத்திற்கு இலக்கானவர்களைக் காண்பது மிகவும் அரிதாகும் – என்பது போன்று, இத்தகைய நிலை கிட்டுவதே அரிதாகும்; ஸ்ரீவசனபூஷணம் (415) - விஷயப்ரவணனுக்கு அத்தைவிட்டு, பகவத்விஷயத்திலே வருகைக்குள்ள அருமை போலன்றிறே, ப்ரதம பர்வத்தைவிட்டு சரமபர்வத்திலே வருகைக்குள்ள வருமை – என்று கூறுவதற்கு ஏற்ப தன்மையைக் கொண்டவர்கள் யாரும் இல்லை என்று

அறிந்து கொண்டு. அதாவது இத்தகைய நுட்பமான உண்மையை அறிந்துள்ளவர் இவர் ஒருவர் மட்டுமே என்று அமுதனார் சிந்தித்தபடி உள்ளார். (இராமாநுசன்) - எம்பெருமானார். தனது முந்தைய அவதாரங்களில் வெளியிடாத ஆழ்பொருளையே இங்கு வெளியிடத் தொடங்கினார்.

**வ்யாக்யானம்** – (தன் தகவால்) "ஸவீத்ரீ முக்தாநாம் ஸகல ஜகதேந: ப்ரசமநீ கரீயோபி: தீர்த்தை: உபசித ரஸா யாமுந முகை: நிருச்சேதா நிம்ந இதரம் அபி ஸமாப்லாவயதி மாம் யத்ருச்சா விக்ஷேபாத் யதிபதி தயா திவ்ய தடிநீ" என்கிறபடியே கரை கட்டாக்காவேரி போலே பெருகி வருகிற தம்முடைய பரம க்ருபையாலே. இக் க்ருபை பூர்வாவதாரத்திலே ராம ஸௌந்தர்யத்தாலே அமுக்குண்டு நிற்கையாலே, இவ்வர்த்தத்தை வெளியிட மாட்டாதே யிருந்தார் என்றபடி.

**விளக்கம்** – (தன் தகவால்) - யதிராஜஸப்ததி (60) - ஸவீத்ரீ முக்தாநாம் ஸகல ஜகதேந: ப்ரசமநீ கரீயோபி: தீர்த்தை: உபசித ரஸா யாமுந முகை: நிருச்சேதா நிம்ந இதரம் அபி ஸமாப்லாவயதி மாம் யத்ருச்சா விக்ஷேபாத் யதிபதி தயா திவ்ய தடிநீ - முக்தி பெறத் தகுதியான சேதனர்களை உருவாக்கியபடி உள்ளது; இந்த உலகில் உள்ள பாவங்கள் அனைத்தையும் நீக்கியபடி உள்ளது; மிகவும் உயர்ந்த ஆசார்யர்களான ஆளவந்தார் போன்றவர்களால் பெருமைப்படுத்தப்பட்டது - இவை என்ன என்றால், வற்றாமல் ஓடும் கங்கை போன்ற யதிராஜரின் கருணை வெள்ளம் ஆகும். அந்த வெள்ளமானது யாருக்கும் தாழாமல் நான் இருந்தாலும், தனது கொந்தளிப்பு மூலம் என் மீது பாய்ந்து, என்னை அவரது திருவடிகளில் மூழ்க வைக்கிறது - என்பதற்கு ஏற்ப கரையில் அடங்காமல் பொங்கும் காவேரி போன்று பெருகி வருகின்ற தனது உயர்ந்த க்ருபை மூலமாக. இத்தகைய க்ருபையானது தனது முந்தைய அவதாரமான லக்ஷ்மண அவதாரத்தில், இராமனுடைய அழகு காரணமாக வெளிவராமல் நின்றது; ஆகவே அப்போது இந்தக் கருத்தை வெளிப்படுத்தாமல் இருந்தார்.

**வ்யாக்யானம்** – (தன்னையுற்று ஆள் செய்யும் தன்மையினோர்) "வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குரூணாம்" என்றும், "நித்யம் யதீந்த்ர தவ திவ்ய வபு: ஸ்ம்ருதௌ மே ஸக்தம் மநோ பவது வாக்குண கீர்த்தநேஸௌ க்ருத்யம் ச தாஸ்ய கரணம் து கரத்வயஸ்ய வ்ருத்த்யந்தரேஸ்து விமுகம் கரணத்ரயம் ச" என்றும், "ஸ்ரீமந் யதீந்த்ர தவ திவ்ய பதாப்ஜ ஸேவாம்"

என்றும் சொல்லுகிறபடியே, தம்மையொழிய வேறு ஒரு விஷயாந்தரம் அறியாதபடி ஆச்ரயித்து கரண த்ரயத்தாலும் தமக்கு ஸகலவித கைங்கர்யங்களும் பண்ணவேணுமென்னும் ஸ்வபாவத்தை யுடையரா யிருக்குமவர்கள். தன்மையினோர் – ஸ்வபாவமுடையார்.

**விளக்கம்** – (தன்னையுற்று ஆள் செய்யும் தன்மையினோர்) - யதிராஜவிம்சதி (3) - வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குரூணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் பாதாநு சிந்தந பர: ஸததம் பவேயம் - யதிகளின் அரசரே! என்னுடைய மனம் எப்போதும் உம்மால் நியமிக்கப்பட்ட குருபரம்பரையில் தொடர்கின்ற ஆசார்யர்களின் தாமரை போன்ற திருவடிகளையே எண்ணியபடி இருத்தல் வேண்டும். கூரத்தாழ்வான், திருக்குருகைப்பிரான்பிள்ளான் போன்றவர்கள் தங்கள் வாக்கு, மனம், செயல் ஆகிய மூன்றாலும் உனது திருவடிகளிலேயே நிலைத்து நின்றனர். இவர்களது திருவடிகள் எனது எண்ணத்தில் எப்போதும் நிலைக்கவேண்டும் – என்றும், யதிராஜவிம்சதி (4) - நித்யம் யதீந்த்ர தவ திவ்ய வபு: ஸ்ம்ருதௌ மே ஸக்தம் மநோ பவது வாக்குண கீர்த்தநேஸௌ க்ருத்யம் ச தாஸ்ய கரணம் து கரத்வயஸ்ய வ்ருத்த்யந்தரேஸ்து விமுகம் கரணத்ரயம் ச - யதிகளின் தலைவனே! உன்னுடைய எழிலான திருமேனியை எப்போதும் த்யானித்து இருக்கிம்படி நீ எனது மனதிற்கு அருள வேண்டும். உனது திருக்கல்யாண குணங்களைப் பற்றி மட்டுமே எனது நாக்கு பேசியபடி இருத்தல் வேண்டும். உனக்கு அடிமையாகத் தொண்டு புரிவதற்கு மட்டுமே எனது இரண்டு கைகளும் பயன்பட வேண்டும். மற்ற உலக நாட்டங்களில் இருந்து எனது மூன்று கரணங்களும் (வாக்கு, மனம், செயல்) முற்றிலுமாக விடுபட வேண்டும் – என்றும், யதிராஜவிம்சதி (19) - ஸ்ரீமந் யதீந்த்ர தவ திவ்ய பதாப்ஜ ஸேவாம் ஸ்ரீசைலநாத கருணா பரிணாம் தத்தாம் தாம் அந்வஹம் மம விவர்த்தய நாத தஸ்யா: காமம் விருத்தம் அகிலம் ச நிவர்த்தய த்வம் – யதிராஜரே! உனது தாமரை போன்ற திருவடிகளை நான் அன்றாடம் பணிந்து நிற்க எனக்கு அருள் புரியவேண்டும். இத்தகைய ஒரு பணியை எனக்கு முதன் முதலில், எனது ஆசார்யரான திருவாய்மொழிப்பிள்ளை (ஸ்ரீசைலநாதர்) என் மீது தான் கொண்ட கருணை காரணமாக அளித்தார். இத்தகைய உனது திருவடிகளை நான் பற்றுவதற்கு ஏற்படும் தடைகளை நீயே நீக்கவேண்டும் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, தன்னை அல்லாமல் வேறு எதனையும் அறியாதபடியாக, தன்னை மட்டுமே அண்டி நின்று, மனம் வாக்கு மற்றும் சரீரம் ஆகிய மூன்றாலும் தனக்கு அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்யவேண்டும் என்ற இயல்பு கொண்டபடி உள்ளவர்கள்.

**வ்யாக்யானம்** – (மன்னு தாமரைத்தாள் தன்னை உற்றாள் செய்ய என்னை உற்றான் இன்று) "த்ருணீக்ருத விரிஞ்சாதி நிரங்குச விபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந:" என்றும், "ராமாநுஜார்ய சரண த்வந்த்வ கைங்கர்ய வ்ருத்தய: ஸர்வாவஸ்தாஸு ஸர்வாஸு தாரகா: போஷகாச்ச மே" என்றும் சொல்லுகிறபடியே இப்படி ஸர்வ ப்ரகாரத்தாலும் ச்லாகநீயரா யிருக்குமவர்களை, "உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான்" என்று ஆழ்வார் அத்யவஸித்தாப் போலே, தமக்கு தாரகாதிகளாக அத்யவஸித்து, கம்பீராம்பஸ் ஸமுத்பூதமாய் செவ்வி பெற்றிருக்கிற செந்தாமாரை மலர் போலே யதிஸுகுமாரங்களாய் ஒன்றுக்கொன்று போலியாய் பொலிந்து, என்றும் அத்யந்த போக்யங்களாயிருக்கிற அவர்களுடைய திருவடிகளை "தத் தாஸதைக ரஸதா அவிரதா மம அஸ்து" என்கிறபடியே "வழுவிலா வடிமை செய்யவேணு"மென்னும் மநோரதத்தையும், "மம மத்பக்தபக்தேஷு ப்ரீதிரப்யதிகா பவேத் தஸ்மாத் மத்பக்தபக்தாச்ச பூஜநீயா விசேஷத:" என்று அவனுடைய ஊற்றத்தைப் போன்ற ஊற்றத்தைய முடையராய்க் கொண்டு, மற்றொரு பேறும் மதியாதபடி பற்றினார், மநோரதித்தபடியே அவர்களுக்கு வழுவிலாவடிமை செய்ய வேண்டும்படியாக அடியேனை இன்று திருத்தி அங்கீகரித்தருளினார். மன்னுதல் –பொருந்துதல். இவ்வங்கீகாரம் முன்பு உண்டாயிருந்த தொன்றல்ல. (இன்று உற்றான்) "அத்யமே ஸபலம் ஜந்ம ஸுப்ரபாதா ச மே நிசா" என்கிறபடியே "விடியா வெந்நரகம்" அற்றுப்போய் இன்று நல்வீடு உண்டாகத் தொடங்கிற்று என்கிறார்.

**விளக்கம்** - (மன்னு தாமரைத்தாள் தன்னை உற்றாள் செய்ய என்னை உற்றான் இன்று) - த்ருணீக்ருத விரிஞ்சாதி நிரங்குச விபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந: - இராமானுஜருடைய தாமரை போன்ற திருவடிகளை அண்டியிருப்பவர்கள் நான்முகன் பதவியைக்கூட ஒரு புல்லாகவே கருதுவர் – என்றும், ராமாநுஜார்ய சரண த்வந்த்வ கைங்கர்ய வ்ருத்தய: ஸர்வாவஸ்தாஸு ஸர்வாஸு தாரகா: போஷகாச்ச மே - என்றும் கூறுவதற்கு ஏற்ப, திருவாய்மொழி (6-7-1) – உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான் - என்று நம்மாழ்வார் ஈடுபட்டு நின்றது போன்று, தனக்கு உயிர் வாழ்வதற்கு ஏற்றவர்களாக எண்ணியபடி நின்று. மிகுந்த அழகுடன் கூடிய

செந்தாமரை மலர்கள் போன்று மென்மையாகவும், ஒன்றுக்கொன்று பொருந்தியபடியும், எப்போது இன்பம் அளிக்கும்படியும் உள்ள அவர்களுடைய திருவடிகளை. யதிராஜவிம்சதி (16) - சப்தாதி போக விஷயா ருசி: அஸ்மதீயா நஷ்டா பவதி இஹ பவத் தயயா யதீந்த்ர த்வத் தாஸ தாஸ கணாநா சரம அவதௌ யஸ் தத் தாஸதைக ரஸதா அவிரதா மம அஸ்து - யதிராஜரே! அழியக்கூடிய உலக இன்பங்கள் மீது எனக்கு ஏற்படும் பற்றுகளை நீக்க நீயே அருளவேண்டும். இத்தகைய இன்பங்கள் பின்வரும் நாட்களில் துன்பமே ஏற்படுத்துவதால், இவற்றை உனது கருணை மூலம் நீக்கவேண்டும். என்னை உனது தொண்டனுக்குத் தொண்டனாகக் கொள்ளவேண்டும். இதன் மூலம் நான் உன்னைச் சரணம் என்று பற்றும்படி செய்யவேண்டும். உனக்கு அர்ப்பணிக்க என்னிடம் ஏதும் இல்லை. ஆகவே என்னிடம் இருந்து எதனையும் எதிர்பாராமல் உள்ள உனது கருணை மட்டுமே கொண்டு என்னை நீ காக்க வேண்டும் – என்பதற்கு ஏற்ப, ஒரு குறையும் இன்றி அடிமை செய்தபடி இருக்கவேண்டும் என்ற விருப்பத்தையும், மஹாபாரதம் ஆச்வமேதிகபர்வம் (116-23) - மம மத்பக்தபக்தேஷு ப்ரீதிரப்யதிகா பவேத் தஸ்மாத் மத்பக்தபக்தாச்ச பூஜநீயா விசேஷத: - எனது அடியார்கள் மீது பக்தியுள்ளவர்களிடம் எனக்கு அதிகமான ப்ரேமை உள்ளது. ஆகவே அவர்களை நன்கு ஆராதிக்க வேண்டும் - என்று ஸர்வேச்வரனுடைய விருப்பம் போன்று தானும் எல்லையற்ற நாட்டமும் கொண்டு, மற்றொரு பேறும் மதியாதபடி பற்றினார் - என்பதற்கு ஏற்ப அவர்களுக்குத் தடையற்ற கைங்கர்யம் செய்ய வேண்டும்படியாக என்னைத் திருத்தி ஏற்றுக்கொண்டார். இத்தகைய அங்கீகரம் என்பது முன்பு ஏற்பட்ட ஒன்றல்ல. (இன்று உற்றான்) - அத்யமே ஸபலம் ஜந்ம ஸுப்ரபாதா ச மே நிசா – இன்று என் ஜன்மம் சாபல்யம் அடைந்தத்ய், நன்றாக விடிந்தது - என்பதற்கு ஏற்ப, திருவாய்மொழி (2-6-7) – விடியா வெந்நரகம் – என்பது விலகிப்போய், இன்று நல்வீடு உண்டாகத் தொடங்கியது என்கிறார்.

ஸ்வாமி திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே சரணம்

…தொடரும்